# கருணாநிதி குறித்த சாகித்திய அகாதெமி நூல்

## முதல்வரிடம் அளிப்பு



முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து தான் எழுதி சாகித்திய அகாதெமி வெளியிட்ட 'இந்திய இலக்கியச் சிற்பிகள் – கலைஞர் மு.கருணாநிதி' என்ற நூலை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் செவ்வாய்க்கிழமை வழங்கிய தமிழ்ப் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன். உடன் சாகித்திய அகாதெமி அலுவலர் சந்திரசேகர ராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் சீனிவாசன்.

**சென்னை, ஜூலை 25:** சாகித்திய அகாதெமியின் வெளியீடான, 'இந்திய இலக்கியச் சிற்பிகள்–கலைஞர் மு.கருணாநிதி' நூல் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளிக்கப்பட்டது. இதை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ம.இராசேந்திரன் நேரில் அளித்தார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கலை இலக்கியப் பங்களிப்பு, அவரது அரசியல் மற்றும் வரலாறு ஆகியவற்றின் பின்னணியில் இந்திய இலக்கியச் சிற்பிகள்–கலைஞர் மு.கருணாநிதி என்ற நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த நூலை முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தொகுத்துள்ளார். இதனை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை செவ்வாய்க்கிழமை சந்தித்து, இந்த நூலை ம.இராசேந்திரன் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, சென்னை சாகித்திய அகாதெமி அலுவலர் சந்திரசேகர ராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் சீனிவாசன் ஆகியோர் உடனிருந்ததாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.